DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.73/2021**

Prosecution **PW.4**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | வேலுசாமி | கிராமம் : | |
| தந்தை பெயர் : | கந்தசாமி | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2025.

எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, உள்வீரராக்கியத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இறந்து போன புகார்தாரர் சாமியப்பனை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதி பெறப்பட்டு பிறழ்சாட்சியாக விளம்புகை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. போலீசாரின் விசாரணையின் போது 26.07.2012ம் தேதி இரவு 9.00 மணியவில் நானும், குமாரும் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சிவிட்டு, சாமியப்பன் வீட்டு வழியாக வந்தபோது, சாமியப்பன் ஜன்னல் வழியாக சத்தம்போட்டு, கதவை திறந்துவிடும்படி கூறியதில்பேரில், நாங்கள் கதவை திறந்துவிட்டோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சாமியப்பன் பதற்றமாக இருந்தார் என்றும், 4 நபர்கள் அரிவாளை காட்டி மிரட்டி 35 பவுன் நகை, பணம் ரூ.2,500/- மற்றும் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தை எடுத்து சென்றதாக கூறினார் என்றும், சம்பவம் குறித்து அவருடைய உறவினர்களுக்கு தெரிவித்தேன் என்று

போலீசாரின் விசாரணையின் போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.